


**15. 06. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தேச கட்டமைப்பில் நடுத்தர வகுப்பு பிரிவினர் பல்வேறு வகைகளில் நாட்டிற்காக சேவையாற்றி உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

2. நாடுமுழுவதும் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட இடங்களில் யோகா தின கொண்டாட்டங்கள் நடைபெறும் என்று மத்திய ஆயுஷ் அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

3. கீர்த்தி சக்ரா விருதாளரான ராணுவ வீரர் லான்ஸ் நாயக் மீனாட்சி சுந்தரத்திற்கு தமிழக அரசின் சார்பில் 48 லட்ச ரூபாய்க்கான காசோலை இன்று வழங்கப்பட்டது.

4. அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்களின் ராஜினாமாவால் ஏற்பட்டுள்ள காலி இடங்களுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க கூடாது என்று அக்கட்சி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது.

5. ஆக்லாந்தில் நடைபெறும் மகளிர் சர்வதேச ஹாக்கி போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வென்றது.

இனி விரிவான செய்திகள்

**************

பிரதமர் – நடுத்தர பிரிவு

தேச கட்டமைப்பில் நடுத்தர வகுப்பு பிரிவினர் பல்வேறு வகைகளில் நாட்டிற்காக சேவையாற்றி உள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நடுத்தர பிரிவினரின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் வகையில் அவர்களுக்காக பணியாற்றுவதில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பெருமிதம் கொள்வதாகவும் பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் சாமானிய மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகவே கொண்டு மத்திய அரசு ஆட்சி நடத்தியதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

வாய்ப்புகள், மேம்பட்ட கட்டமைப்பு, பொது சேவை, அனைவருக்குமான சுகாதாரம், தரமான கல்வி, தூய்மை நகரங்கள் போன்றவற்றால் மக்கள் பயனடைவதை அரசு உறுதி செய்து வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

**************

பிரதமர் - Slovakia

பிரதமர் திரு.நரேந்திரமோடி Slovakia பிரதமர் Robert Fico-வுடன் தலைநகர் Bratislava-வில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

அதிபர் Peter Pellegrini-யையும் சந்தித்து பிரதமர் பேச உள்ளார்.

தமது Slovakia பயணம் இருநாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்தி புதிய வாய்ப்புகளுக்கான திறவு கோலாக அமையும் என்றும் பிரதமர் சமூக வலைதள பதிவில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

**************

நிதின் நபின்

நடுத்தர பிரிவினர் பொருளாதார பாதுகாப்பு, புதிய வாய்ப்புகளுடன் ஆளுமை பெறும் வகையில் மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளாக விரிவான வளர்ச்சி பணிகளை மேற்கொண்டதாக பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்தார்.

வரி சீர்திருத்தங்கள் மூலம், வரி சலுகைகள் வழங்கப்பட்டதாகவும், வரி கட்டமைப்பு முறையில் GST மூலம் வெளிப்படைத்தன்மை கொண்டுவரப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

சமையல் எரிவாயு, ஜல்ஜீவன், நீர்மேலாண்மை , ஸ்வச் பாரத் தூய்மை பாரத பணிகளால் அனைவரும் அடிப்படை வசதிகளை பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதரின் வீட்டு வசதி திட்டத்தால் ஏழை எளிய மக்களின் வீட்டு கனவு நனவானதாகவும், ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்டம் சுகாதார பாதுகாப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய சக்தியாக திகழும் நடுத்தர பிரிவு நுகர்வோரின் ஆளுமை உறுதி செய்யப்பட்டதோடு சுய சார்பு மற்றும் வளர்ச்சி அடைந்த பாரதத்தில் இப்பிரிவினரின் பங்களிப்பு அதிக அளவில் இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

**************

நிர்மலா சீதாராமன்

எல்நினோ சூழலிலும் நாட்டில் போதுமான அளவு உணவு பொருட்கள் கையிருப்பில் உள்ளதால் உணவு பற்றாக்குறை ஏற்படாது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் தென்மேற்கு பருவமழை இந்தாண்டு சராசரிக்கும் குறைவாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டார்.

கரீஃப் பயிர்களுக்கு உரங்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும்,

ரபி பருவத்திற்கான உர விநியோகம் வரும் நவம்பர் மாதம் தொடங்கும் என்றும் குறிப்பிட்டார்..

**************

பிரதாப் ராவ் ஜாதவ்

சர்வதேச யோகா தின கொண்டாட்டங்கள் வரும் 21ஆம் தேதி கொல்கத்தாவில் நடைபெறும் என்று மத்திய ஆயுஷ் அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச யோகா தின முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஆரோக்கியமான முதுமைக்காக யோகா" என்ற தலைப்பில் இந்தாண்டு இத்தினம் கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டார்.

நலமான சுறு சுறுப்பான தற்சார்பு மற்றும் எழுச்சியுடன் கூடிய மனத்துடன் மக்கள் செயலாற்ற யோகா துணை புரிவதாக கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் உலகளாவிய மாபெரும் இயக்கமாக யோகா முன்னெடுத்து செல்லப்படுவதாக கூறிய அவர் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் யோக கலையை தங்களின் வாழ்க்கையின் அங்கமாகவே ஏற்றுக்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட இடங்களில் யோகா இயக்கங்கள் மூலம் யோகா கொண்டாட்டங்கள் நடைபெற இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

**************

விமானம்

நாடுமுழுவதும் அனைத்து விமான நிலையங்களிலும் விமான பயணிகளின் நலனை உறுதி செய்யும் ”பயணிகள் நல தினம்” இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி மதுரை சர்வதேச விமான நிலையத்தில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் மருத்துவ பரிசோதனைகளும் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

முதலமைச்சர்

தமிழகத்தை சேர்ந்த, கீர்த்தி சக்ரா விருதாளரான ராணுவ வீரர் லான்ஸ் நாயக் மீனாட்சி சுந்தரத்திற்கு தமிழக அரசின் சார்பில் 48 லட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் திரு.விஜய் இன்று வழங்கி கவுரவித்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது முதலமைச்சர் அவருக்கு பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டார்.

இந்திய ராணுவத்தின் பீரங்கி படை பிரிவில் பணியாற்றும், தேனி மாவட்டத்தை சேர்ந்த லான்ஸ் நாயக் மீனாட்சி சுந்தரம் 2024-ம் ஆண்டு ஜம்மு கஷ்மீர் மாநிலத்தின் குல்ஹாம் பகுதியில் திவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையின்போது துப்பாக்கி சூட்டில் ஏற்பட்ட பலத்த காயத்தையும் பொருட்படுத்தாது தீரத்துடன் போராடி

பங்கரவாதிகளை வீழ்த்திய துணிச்சல் மிகு செயலை பாராட்டி இந்நடவடிக்கை.

அவரது துணிச்சல் மிகு செயலுக்காக கடந்த 8ஆம் தேதி புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் நாட்டின் இரண்டாவது உயரிய அமைதிக்கால வீர விருதான கீர்த்தி சக்ரா விருதை குடியரசு தலைவர் அவருக்கு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

**************

முதலமைச்சர் – நிவாரணம்

ராமநாதபுரம் மாவட்டம் தேவிபட்டினம் தேர்போகி கிராமம் அருகே இன்று பணியின்போது நேரிட்ட வாகன விபத்தில் உயிரிழந்த தலைமை காவலரின் குடும்பத்திற்கு முப்பது லட்ச ரூபாய் நிவாரண நிதி வழங்க முதலமைச்சர் இன்று ஆணை பிறப்பித்துள்ளார்.

**************

சம்பத்

கோவை சாய்பாபா காலனி பகுதியில் கட்டப்பட்டு வரும் மேம்பாலம் இம்மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சம்பத் குமார் தெரிவித்துள்ளார்.

கோவை மேட்டுப்பாளையும் சாலையில் 71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் இப்பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேம்பால பணிகளின் தரத்தில் எவ்வித குறைகளும் இல்லாமல் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

மழைக்காலங்களில் மேம்பாலத்தில் தேங்கும் மழை நீரை விரைவாக வெளியேற்றும் வகையில் வடிகால் வசதிகள் முறையாக ஏற்படுத்தப்படும் என்றார்.

**************

அஇஅதிமுக

அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் நான்குபேர் ராஜினாமாவால் ஏற்பட்டுள்ள காலி இடங்களுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க கூடாது என்று அக்கட்சி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது.

மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம், அம்பாசமுத்திரம் தொகுதிகள் காலியாக உள்ளதாக சட்டப்பேரவை செயலகம் தேர்தல் ஆணையத்திற்கு தகவல் தெரிவித்த நிலையில் அஇஅதிமுக இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் இருக்கும் நிலையில் சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா ஏற்கப்பட்டிருக்க கூடாது என்றும் அஇஅதிமுக கூறியுள்ளது.

**************

மீன்பிடி தடைக்காலம்

தமிழக கிழக்கு கடற்கரை பகுதிகளில் மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்ததை அடுத்து, புதுக்கோட்டை நாகை, ராமேஸ்வரம் தூத்துக்குடி மாவட்டங்களின் மீனவர்கள் இன்றுஅதிகாலை முதல் கடலுக்குள் மீன்பிடிக்க சென்றனர்.

மீன்களின் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு கடந்த ஏப்ரல் 15ஆம் தேதிமுதல் நேற்றுவரை மீன்பிடி தடைக்காலம் அமலில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

**************

நாமக்கல்

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் நாமக்கல் ரயில் நிலையத்தில் 24 கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

வேலூர்

முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினத்தை ஒட்டி வேலூர் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் ஆட்சித்தலைவர் லீலா அலெக்ஸ் தலைமையில் மனித சங்கிலி விழிப்புணர்வு இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

இருவரி

கடலூர் மாவட்ட வேலை வாய்ப்பு தொழில் நெறி வழிகாட்டு மையத்தில் மத்திய அரசு பணியாளர் தேர்வாணைய தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள் நாளை மறுநாள் முதல், தொடங்க உள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்புத்துறையினரின் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**************

ஹாக்கி

ஆக்லாந்தில் நடைபெறும் மகளிர் சர்வதேச ஹாக்கி போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வென்றுள்ளது.

இந்தியா நாளை ஜப்பானுடன் மோதுகிறது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது